

# பெய்யென பெய்யும் பொய்!

**அன்புள்ள டாக்டர்,**

எனக்கு 36 வயதாகிறது. திருமணமாகி 12 வருடங்களாகின்றன. இரண்டு குழந்தைகள். சென்னையிலுள்ள மிகப் பெரிய ஐடி கம்பெனியில் நல்ல வேலையில் இருக்கிறேன். கணவர் பங்குச்சந்தை பிசினஸில் இருக்கிறார். அன்யோன்யமாக இருந்த எங்கள் வாழ்க்கையில் 4 வருடங்களுக்கு முன் திடீரென புயல் வீச ஆரம்பித்தது. சில வருடங்களாகவே பண விஷயத்தில் அவர் என்னை ஏமாற்றியது சமீபத்தில்தான் தெரிய வந்தது. 4 வருடங்களுக்கு முன்பு, அவருக்கு பிசினஸில் மிகப்பெரிய நஷ்டம் ஏற்பட்டது. கல்யாணத்துக்கு என் அம்மா-அப்பா போட்ட நகைகளை விற்று, அவரது கடனை அடைத்தேன். தவிர நானும் சில லோன்களை போட்டு, அவரது கடன் அடைய உதவினேன். எனது வருமானத்தை எடுத்து அவர் செலவு செய்வார். 'தம்பதிக்கிடையில் இதெல்லாம் ஒரு விஷயமா' என நானும் அதைப் பெரிதாக நினைத்ததே இல்லை. அவர் சொன்ன அத்தனையும் பொய், அவருக்கு இருந்த கடன்கள் எல்லாம் பொய் எனத் தெரிந்ததும் அப்படியே நொறுங்கிப் போனேன்.

ஒரு பொய்யை மறைக்க, அடுத்தடுத்து நிறைய பொய்களை சொல்ல ஆரம்பித்தார். எதற்கெடுத்தாலும் பொய்... எப்போதும் பொய்... அதன் விளைவுகளைப் பற்றியெல்லாம் அவர் யோசித்ததே இல்லை. பொருளாதார விஷயத்தைப் பற்றி என்னிடம் பேச அவர் என்றுமே தயாராக இருந்ததில்லை. அவருக்கென்ன..? என்னுடைய பணத்தில் தானே அவரது வண்டி ஓடுகிறது!




உண்மை தெரிந்த பிறகு எனக்கு பயமாக இருக்கிறது. என் குழந்தைகளின் எதிர்காலத்தை நினைத்து மிரட்சியாக இருக்கிறது. அவர்களுக்கென எந்த ஒரு சேமிப்போ, பாலிசியோ இல்லை. கணவர் இப்படி ரகசியமாகவே நடந்து கொள்வதுதான் வேதனையளிக்கிறது. ரொம்பவும் கோபப்பட்டு ஏதேனும் பேசினால், விரக்தியில் வீட்டை விட்டு வெளியே போய் விடுகிறார். பொதுவாக அப்படிப் போனால், சில மணி நேரத்தில் திரும்பி விடுவார். ஆனால் கடந்த வாரம், நான்கைந்து நாள்கள் கழித்துதான் வந்தார். தற்கொலை செய்து கொள்வதாகவும் மிரட்டுகிறார் (என் மாமனாரும் தற்கொலை செய்து இறந்தவர்). பொருளாதாரப் பிரச்னை தவிர்த்து, எங்கள் இருவருக்குள்ளும் வேறு எந்தப் பிரச்னையும் இல்லை. எங்களுடையது காதல் திருமணம். அவர் என்னை எவ்வளவு நேசிக்கிறார் என்று எனக்குத் தெரியும். நேசிக்கிற ஒருத்தருக்கு இப்படியும் துரோகம் செய்ய முடியுமா என்பதுதான் என் கேள்வி. பொய் பேசுவதிலிருந்து அவரை மீட்க



## உறவுச் சிக்கலுக்கு தீர்வு சொல்கிறார் மனநல மருத்துவர் கவுதம் தாஸ்

**ஏதேனும் சிகிச்சை அளிக்க முடியுமா டாக்டர்? எங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி மலருமா?**

- பெயர் வெளியிட விரும்பாத திருச்சி வாசகி.

**அன்புச் சகோதரி,**

25 முதல் 55 வயதுக்காரர்களில் 30 சதவிகிதம் பேர், தமது வாழ்க்கைத் துணையிடம், வரவு, செலவு விஷயங்களில் நேர்மையாக இருப்பதில்லை என்கிறது ஒரு ஆய்வு. வரவு, தனக்கான செலவு, முதலீடு, ஓய்வுக்குப் பிறகான பொருளாதாரக் கணக்கு, வீட்டுக்கான செலவுகள் எனப் பலதும் இதில் அடக்கம். உலகிலேயே உங்கள் கணவர் மட்டும்தான் இப்படி என நினைத்து வருந்தாதீர்கள். பொருளாதார விஷயங்களை உங்களிடமிருந்து அவர் மறைக்க, அவர் தரப்பில் ஏதேனும் காரணங்கள் இருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து, ஏன் அப்படிச் செய்கிறார் எனத் தெரிந்துகொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு. அவற்றைப் புரிந்துகொண்டு, கணவரிடம் மனம் விட்டுப் பேசுங்கள்.

கணவர் செய்த தவறுகளை மன்னியுங்கள். அதற்காக அவற்றை மறக்க வேண்டும் என அர்த்தமில்லை. அடுத்து உங்கள் வாழ்க்கை சுமுகமாகப் பயணிக்க வேண்டுமென்றால், அதற்கு அடிப்படை இந்த மன்னிப்பு. அதைத் தவிர்த்து நடந்ததைக் குத்திக் காட்டிப் பேசுவதை நிறுத்துங்கள். அவர் என்ன செய்தார், ஏன் அப்படிச் செய்தார் என்பதைப் புரிந்துகொள்வதுதான் உங்கள் நோக்கம் என்பதையும் அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள். அது உங்களுக்குப் புரிந்து விட்டால், உடனே அவருக்கு அட்வைஸ் செய்யாதீர்கள். இந்த நிலைமையை சுமுகமாக்க என்ன செய்யலாம் எனப் பேசுங்கள். நீங்கள் சேமிக்கிறவராகவும், அவர் செலவாளியாகவும் இருந்தால், இந்த விஷயத்தில் நிறைய விட்டுக்கொடுத்தல் தேவைப்படும். திருமண உறவில் இரண்டு தனி நபர்களின் தேவைகளுக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும். அவரது தனிப்பட்ட தேவைகளை நீங்களும், உங்களது தனிப்பட்ட தேவைகளை அவரும் புரிந்து கொள்ள வேண்டும். செலவு செய்ய, விரும்பியதை நிறைவேற்றிக் கொள்ள, முதலீடு செய்ய... இப்படிப் பல விஷயங்களுக்கு இருவரிடமும் பணம் இருக்க வேண்டும். இப்படியெல்லாம் செய்த பிறகும், இருவருக்குள்ளும் பிரச்னைகள் தொடர்ந்தால், அது பணத்தால் உண்டான பிரச்னையாக இருக்காது. கடன், வரவு, செலவு குறித்த உங்கள் வாக்குவாதங்கள் தொடர்ந்தாலோ, கணவரின் பொய் தொடர்ந்தாலோ, இருவரும் கவுன்சலிங் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். அதோடு, அவருக்கு மன அழுத்தம் இருப்பதால் உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

எழுத்து வடிவம்: **சாஹா**

மேலும் பெண்களுக்குப் பயனுள்ள செய்திகளுக்கு: http://www.dinakaran.com/ladiesnew

வாங்கியாச்சு தானே!




இஷ்டமெல்லாம் ஈடேற்றும் கிருஷ்ணமங்கள ஸ்தோத்திரம்

வித்தியாசத் தகவல்களுடன் கண்ணன் கதை

ஆகஸ்ட் 2012

ஆன்மிகம்

தினகரன் குழுமத்திலிருந்து வெளியாகும் தெய்வீக மாத இதழ் பலன்